சேலம் மத்திய மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் அவைத்தலைவர் ஜி.கே. சுபாததலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன் சிறப்புரையாற்றினார். கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

கடல் ஆமைகளைப் பாதுகாக்க

விசைப் படகுகளில் நவீன கருவி பொருத்தப்படும்!

அமைச்சர் க.பொன்முடி பேட்டி!

சென்னை, பிப். 17-

“கடல் ஆமைகளைப் பாதுகாக்க விசைப்படகுகளில் நவீன கருவி பொருத்தப்பட்டு படகின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும் என அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

தமிழக வனத்துறை, மீன் வளத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கடலோர காவல்படை, இந்திய கடற்படை மற்றும் கடல் ஆமை பாதுகாப்பில் உள்ள தன்னார்வ அமைப்பினர் கலந்து கொண்ட கடல் ஆமைகள் பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம், சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்கு அமைச்சர் பொன்முடி அளித்த பேட்டி வருமாறு:-

வேட்டையாட தடை செய்யப்பட்ட பட்டியலில் ஆமைகள் உள்ளன. முட்டையிடும் காலகட்டத்தில் அவை கடற்கரையில் இருந்து 5 கடல்மைல் (9 கி.மீ.) தூரத்திற்கு வருகின்றன. அந்த 9 கி.மீ. பகுதியில் நாட்டுப் படகில் சென்று மீன் பிடிப்பதினால் பிரச்சினைகள் எழுவதில்லை. ஆனால் விசைப் படகுகள் செல்லும்போது ஆமைகளுக்குப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த பகுதியில் விசைப்படகுகள் மூலம் மீன் பிடிக்கும் போது ஆமைகளும் சிக்கிவிடுகின்றன. இதை தடுப்பதற்காக வனத்துறை மற்றும் மீன்வளத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

கடல் ஆமைகளைப் பாதுகாப்பதில் மீனவர்கள் ஒத்துழைக்க வேண்டும். அவை மீன்பிடி வலைகளில் சிக்கி இறந்துவிடக் கூடாது என்பதுதான் அரசின் நோக்கம். எனவே இதுகுறித்து மீனவர்களிடையே ஒரு கருத்தை உருவாக்குவதென்று அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பணியில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்கள். இதற்கான விசைப் படகுகளில் ஒரு நவீன கருவி பொருத்தப்பட்டு, அதன் மூலம் படகின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும். மீன்வளத் துறை இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி கூறினார்.

நாகை மாவட்டம் முழுவதும்

திராவிட மாடல் நாயகர் முதல்வர் பிறந்தநாளை சிறப்புடன் கொண்டாடுவோம்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

நாகை. பிப். 16-

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், க.மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் பேசினார்.

கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறுபாண்மை அணி துணைச் செயலாளர் சாகுல் ஹமீது, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், மகா. குமார், கே.பழனியப்பன், செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், சிக்கல் என்.ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா. மலர்வண்ணன் நகரக் கழகச் செயலாளர்கள் இரா. மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக் குழு உறுப்பினர்கள் கே.பாண்டியன், எஸ்.பன்னீர்செல்வம், கோசி.குமார், இல.பழனியப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், எல்.எஸ்.ஈ.பழனியப்பன், பேரூர் கழகச் செயலாளர்கள் க.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமது சுல்தான், சி.சுப்பரமணியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா. முருகையன் அ.பாரிபாலன், க.சத்தியமூத்தி, ஆர்.துரைராஜ், இளம்சுந்தர், பால. முரளி, ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ஆர்.துரைராசு, கே.எஸ்.சாகுல்ஹமீது, இளம்.சுந்தர், ப.உதயக்குமார், த.தமேந்தி, ஆர்.ஆர். குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், கேஸ் வீ.செந்தில், பி.முருகானந்தம், எஸ்.சந்தோஷ், எம்.தினேஷ்குமார், எஸ்.வெற்றிச்செல்வன், ஆர்.சுரேந்தர், வ.கமல், எஸ். பாலமுரளி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.எஸ். அசோக், ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்.

50 ஆண்டு கால பொது வாழ்க்கைக்கு சொந்தகாரர், பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், துணை பொதுச்செயலாளர், இளைஞர் அணி மாநில செயலாளர், கழக பொருளாளர், கழக துணைத்தலைவர், கழகத் தலைவர் என்றும், பொது வாழ்க்கையில் சென்னை மேயர், சட்ட மன்ற உறுப்பினர், அமைச்சர், துணை முதல்வர், முதல்வர் என உழைப்பால் உயர்ந்த கழகத்தலைவர், திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி முத்து வேல்கருணாநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் வரும் மார்ச் 1ம் தேதி அன்றும் மற்றும் மாதம் முழுவதும் நாகை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளை, வார்டுகள் தோறும், கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களில் உணவு, உடை வழங்கியும்,ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பொதுக்கூட்டம், தெரு முனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தியும், மருத்துவ முகாம், இரத்ததான முகாம் நடத்தியும், மரக்கன்றுகள், நட்டும், வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியும் எழுச்சியுடன் சிறப்பாக கொண்டாடிடுவது என்றும் ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழகச்செயலாளர்கள் செய்திட வேண்டும் என்றும் தளபதி பிறந்த நாள் விழாவில் மாநில, மாவட்டக்க ழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும்,

3.3.2025 அன்று நாகை புத்தூர் கோட்டைவாசல் ஆர்ச் அருகே நடைபெற உள்ள நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் இல்ல திருமண விழாவை தலைமை தாங்கி நடத்தி வைக்கவும் மற்றும் நாகை பால்பண்ணைச்சேரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள தளபதி அறிவாலயத்தை திறந்து வைக்கவும் நாகைக்கு வருகை தரும் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கும் நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பது என்றும் இரண்டு நிகழ்ச்சிகளிலும், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், நகராட்சி, பேருராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றும், இந்த நிகழ்ச்சிகளில் கழகத்தினர் பெரும் அளவில் கலந்து கொள்ள சிறப்பான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் செய்திட வேண்டும் என்றும்,

தமிழ்நாட்டில் அத்து மீறும் ஆளுநர் ரவியை கண்டித்து நாகை அவுதிடலில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், சர்வாதிகாரப்போக்குடன் நடந்து கெள்ளும் ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சியின் நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்த ஒன்றிய மோடி அரசை கண்டித்து நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், நகராட்சி, பேருராட்சி உறுப்பினர்கள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஜெயங்கொண்டம் ஒன்றிய அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கழக இருவண்ணக் கொடியை அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஏற்றி வைத்தார். இதில் கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், ஒன்றிய கழக செயலாளர் தனசேகர், தலைமைசெயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன், நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி , பேரூர் செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், மாவட்ட பொருளாளர் கு.ராஜேந்திரன் மற்றும் மாவட்ட ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

புதுக்கோட்டை மாநகராட்சி, கீழ 3ஆம் வீதியில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவர் விடுதியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் திறந்து வைத்து, மாணவர்களுக்கு விடுதியில் தங்குவதற்கான அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்கள். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் , மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

சேலம் மத்திய மாவட்டம் முழுவதும்

கழகத் தலைவர் - முதல்வர் பிறந்தநாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சேலம், பிப்.17-

சேலம் மத்திய மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமைச்சர் மாவட்டச் செயலாளர் இரா. இரோஜேந்திரன் பேசிய தாவது:-

சேலம் மத்திய மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 14.02.2025 வெள்ளிக்கிழமை காலை 10.30மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ஜி.கே.சுபாசு தலைமையில் மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் மாளிகை”யில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

நீதிகட்சியாக - சுயமரியாதை இயக்கமாக - திராவிடர் கழகமாக - திராவிட முன்னேற்றக் கழகமாக நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தில் சுயமாரியாதை உணர்வில் தந்தை பெரியாரையும், ஒரு இயக்கத்தை கொள்கை அடிப்படையிலும் அனைத்து தரப்பினரையும் அரவணைத்து நடத்திச் செல்வதில் பேரறிஞர் அண்ணாவின் கனிவையும், இயக்கத்தை எந்த சூழ்நிலையிலும் போராட்டங்களால் உயிர்ப்போடு வைத்திருப்பதில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் உறுதியையும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற தலைவர்.

14வது வயதில் கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.க தொடங்கி, வட்டக் கழக பிரதிநிதி, மாவட்டக் கழக பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், செயற்குழு உறுப்பினர், இளைஞர் அணிச் செயலாளர், சட்ட மன்ற உறுப்பினர், சென்னை பெருநகர மேயர், கழகத்தின் துணை பொதுச் செயலாளர், கழகப் பொருளாளர், செயல் தலைவர் எனப் படிப்படியாக உழைப்பால் உயர்ந்து, இன்று கழகத்தின் தலைவராக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக தமிழ்ச் சமுதாயத்திற்காக கழகப் பணியிலும் - ஆட்சிப் பணியிலும் அரை நூற்றாண்டு கண்ட பெருமைக்கு சொந்தக்காரர்.

சுயமரியாதை - சமூகநீதி - சமத்துவம் - சகோதரத்துவம் - பெண்ணுரிமை - மாநில சுயாட்சி - இளைஞர் நலன், உள்கட்டமைப்பு வசதிகள் என அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அனைவரின் வளர்ச்சி என்பது தான் ”திராவிடமாடல்” ஆட்சி என இந்திய துணைக்கண்டத்திற்கே முன்மாதிரி அரசாக தமிழ் நாட்டை வளர்த்தெடுத்து வருகிறார்.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு மகளிருக்கும் சகோதரனாக தந்தையாக இருந்து வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டம், மகளிர் விடியல் பயணத்திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம், உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம் என அவர் வகுத்த திட்டங்கள் அனைத்தும் அடுத்த நூறு தலைமுறை தாண்டிய வளர்ச்சிக்கான அடித்தளமாகும்.

உழைப்பால், தியாகத்தால், அனைவரையும் அரவணைக்கிற பண்பால், கண்ணியத்தால் உயர்ந்து நிற்கிற நம் கழகத் தலைவர் அவர்களின் வியூகம், உழைப்பு, தோழமைக் கட்சிகளை அரவணைக்கும் பண்பு, நிர்வாகத் திறமை, தமிழ்நாடு அரசினை ”திராவிட மாடல்” ஆட்சியாக வழி நடத்தும் மாண்பு என நம் கழகத் தலைவர் அவர்களை கண்டு இந்திய துணை கண்டமே வியந்து பாராட்டுகிறது.

இவ்வளவு பெருமைகளையும் சிறப்புகளையும் கொண்ட கழகத்தின் ஒப்பற்ற தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் மார்ச்1. இந்த நாள் கழகத் தோழர்களுக்கும், தமிழ் மொழி உணர்வு, தமிழர் இன உணர்வு கொண்ட பொதுமக்கள், சான்றோர் பெருமக்கள் அனைவருக்கும் உவகையும், உள்ளத்தில் மகிழ்ச்சியும் பொங்கிடும் நாள்.

கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா வினை சேலம் மத்திய மாவட்டக் கழகத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கழக இருவண்ண கொடியினை உயர்த்தி வைத்து பெதுக்கூட்டங்கள் நடத்தியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மருத்துவ முகாம்கள், மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள், மரக்கன்றுகள் நடுதல் என அனைத்து நிகழ்ச்சிகளையும் எழுச்சியோடு ஏற்பாடு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, தொழிலாளர் அணி, மகளிர் அணி,

மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, அயலக அணி, சுற்றுச்சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைத்து நிர்வாகிகளையும், கழகத் தோழர்களையும் இந்த நிகழ்ச்சிகளை எழுச்சியோடு, உணர்வுபூர்வமாக சிறப்பாக கொண்டாட வேண்டும் என சேலம் மத்திய மாவட்ட தி.மு.க அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

போற்றுதலுக்குரிய கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவர் தம் சிந்தனைகேற்ப தமிழ் நாடு இளைஞர்களை உலக அரங்கில் சிறந்த விளையாட்டு வீரர்களாக வார்த்தெடுக்கும் நோக்கத்தோடு அவர்களை விளையாட்டு போட்டிகளில் ஊக்குவிக்க மாநகரத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும், ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைக்கழகங்கள்தோறும், பேரூரில் உள்ள வார்டு கழகங்கள் தோறும் ஆண்களுக்கான கிரிகெட், கைப்பந்து, கால்பந்து, கபடி, தடகளம், இறகுபந்து (Badminton), தடகளம் (Athletics), மேசை பந்தாட்டம் (Table Tennis), மிதிவண்டி ஓட்டுதல் (Cycling), யோகாசனம், பானை உடைத்தல், வழுக்கு மரம் ஏறுதல்,

கயிற்றாட்டம் (Skipping) உள்ளிட்ட போட்டிகளையும், மகளிருக்கான கோலப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி, மிதிவண்டி போட்டி, கோகோ, இசை நாற்காலி, ஓவிய போட்டி உள்ளிட்ட போட்டிகளையும் நடத்தி பரிசுகளை வழங்கி ஊக்கபடுத்துவது என்றும் மத்திய மாவட்டக் கழகம் தீர்மானிக்கிறது.

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில்

தெருமுனைப் பிரசாரம்!

நன்னிலம் ,குடவாசல் பகுதிகளில் நடைபெற்றது!

திருவாரூர்,பிப்-17.

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில் நன்னிலம், குடவாசல் பகுதிகளில் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் , மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் நடைபெற்றது. ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ். ஜோதிராமன், கேப்டன் செல்வராஜ், நகர செயலாளர் பக்கிரிசாமி, பேரூர் செயலாளர் சிவ.தியாகு உள்ளிட்டோர் தலைமை ஏற்று பங்கேற்றனர். நிகழ்வுகளில் மாநில இலக்கிய அணி செயலாளர் ஆடுதுறை உத்திராபதி மற்றும் தலைமை கழக பேச்சாளர் சோம இளங்கோவன் உள்ளிட்டோர் பங்கேற்று பிரச்சார உரையாற்றினர்.

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் எண்கண் சா.மணி கூட்டங்களை ஒருங்கிணைத்து நடத்தினார்.

திமுக இலக்கிய அணி சார்பில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில், மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, திராவிட மாடல் அரசின் பொற்கால ஆட்சியின் சாதனைகள், துணை முதல்வர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களுடைய பிறந்தநாள் ஆகியவற்றை முன்னெடுத்து , மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் பிரச்சாரக் கூட்டங்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

நன்னிலம் ஒன்றியத்தில் கொல்லுமாங்குடி மற்றும் கொல்லாபுரம், பேரளம் ஆகியபகுதிகளில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் கேப்டன் எம். செல்வராஜ் தலைமை ஏற்றார். நன்னிலம் நகரப்பகுதியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நகரச்செயலாளர் பக்கிரிசெல்வம் தலைமை ஏற்றார். குடவாசல் ஒன்றியத்தில் எரவாஞ்சேரி, மருதுவாஞ்சேரி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற கூட்டங்களுக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.ஜோதிராமன் தலைமை ஏற்றார். பேரளம் பேரூர் பகுதியில் பேரூர் செயலாளர் சிவ. தியாகு தலைமையேற்றார்.

மாநில இலக்கிய அணியின் துணை செயலாளர் ஆடுதுறை உத்திராபதி, தலைமை கழக பேச்சாளர் மன்னை.சோம. இளங்கோவன், ஜாகிர்உசேன், தங்க.குணசேகரன் , நல்லாசிரியர் செல்லத்துரை, புத்தகஞ்ர் ஜோதி, உள்ளிட்டோர் பங்கேற்று பிராச்சாரம் செய்தனர்.

கூட்டங்களின் முடிவில் மாவட்ட இலக்கிய அணியின் துணை அமைப்பாளர் பாலமுத்து நன்றி கூறினார்.